**அயகம பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 28 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் அயகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் வழங்கல் மற்றும் உபகரண கொள்வனவு ரூபா 500,975 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்ய வேண்டும். | 2019 ஆண்டு முதல் கணக்கு தயாரிக்கையில் சரியான கணக்கு முறைமையை பயன்கடுத்தி கணக்குப் பதிவிடுகிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய அங்கத்துவ எரிபொருட் படி ரூபா 22,500 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்ய வேண்டும். | அட்டுறு அடிப்படையில் கணக்கு பதியப்படாமையினால் ஏற்பட்ட இழப்பை திரண்ட நிதியத்திற்கு சீராக்குவதன் மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கினறேன். |
| (இ) | நிலுவை சம்பள மீள் நிரப்பும் வருமானம் ரூபா 44,530 குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது. | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்ய வேண்டும். | 2019 ஆணடிற்குரிய கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்க குறித்துக் கொண்டேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை வாடகை ரூபா 157,300 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்ய வேண்டும். | கணக்கிடப்படாத நிலுவை கடை வாடகையினை 2019 ஆணடிற்குரிய கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்க குறித்துக் கொண்டேன். |
| (உ) | பிரதான அமைச்சிற்கு தீர்க்க வேண்டிய முற்பணத்தில் இருந்து ரூபா 1,200,000 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்ய வேண்டும். | 2019 ஆண்டில் முன்னைய ஆண்டு தவறுகளை சீர்செய்தலின் கீழ் கணக்குகளில் சீராக்க குறித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | முத்திரைக் கட்டணம் குறைக்கப்பட்டிருந்த போதும், அப் பெறுமதியினை முற்பணக் கணக்கிற்கு சீராக்கி இருக்கவில்லை. | | கொண்டேன். |
| (ஊ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்காக பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 1,709,954 குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது. | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்ய வேண்டும். | முத்திரை கட்டண வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானமாக இனங்காணப்படுவதுடன் இவ் வருமானத்திற்கு மேலதிக ஒதுக்கீடு மற்றும் குறை ஒதுக்கீடு இருப்பின் இனங்கண்டு மீதிகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவு ரூபா 167,501 இற்காக கடன் கொடுனர் ஒதுக்கீடு செய்திருக்கவில்லை. | உரிய சீராக்கம் மூலம் கணக்கினை சீர்செய்யவேண்டும். | 2019 ஆணடிற்குரிய கணக்குகளை தயாரிக்கும் போது ஆண்டிற்கான அனைத்து கடன் கொடுனர்களையும் இனங்கண்டு கணக்குகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஏ) | 2018 ஆண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக இரண்டு சந்தர்பங்களில் முறையே ரூபா 150,000 மற்றும் 200,000 கடன் கொடுனர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேலதிக ஒதுக்கீட்டிற்கான உரிய சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டில் மேலதிக ஒதுக்கீட்டின் கீழ் சீராக்கி கணக்கை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2011 முதல் 2016 வரை காலத்திற்குரிய கூட்டுத் தொகை ரூபா 1,287,658 ஆன காலவதியான வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலவதியான வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | VAT/NBT பணம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிய போதும் வைப்பு பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. இப் பணத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 | சபைக்கு சொந்தமான 05 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான வாகனங்களின் எரி பொருள் பாவனையினைசுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் எதிர்காலத்தில் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்கின்றேன். |

| | |
|---|---|
| பந்தி | பிரகாரம் பரிசீலனை செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை விஞ்சிய செலவு ரூபா 1,772,038 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,124,181 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமனம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 658,000 | 1,233,134 | 1,014,333 | 193,606 | 626,300 | 848,489 | 871,840 | 149,210 |
| (ii) | வாடகை | 6,221,170 | 4,656,723 | 4,512,532 | 147,376 | 3,974,775 | 4,133,380 | 4,142,544 | 3,240,504 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 286,410 | 321,511 | 264,971 | 3,950 | 208,360 | 330,977 | 309,567 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,849,450 | 5,057,487 | 6,368,402 | 7,040,838 | 1,677,200 | 5,509,458 | 2,022,974 | 8,408,065 |

#### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி வரையில் 105 வீத வரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதி ரூபா 45,687 ஆனது. | நிலுவை வீத வரியை விரைவில் அறவிட வேண்டியமை. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 136,621 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்ஞிய பழைய 111 அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 29,933 உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிலுவை ஏக்கர் வரியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | சபையினால் செயற்படுத்தப்படும் 10 நீர் திட்டங்களிற்குரிய நிலுவை | நிலுவை நீர்க் கட்டணத்தை | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | |
|---|---|
| நீர்க் கட்டணம் ரூபா 206,563 ஆனது. அவற்றில் ரூபா 133,984 தொகை 06 மாதங்களையும் விஞ்ஞிய காலமாக நிலுவையாக காணப்பட்டது. | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டிமை. |

**2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள பணம் செலுத்தியிருந்த 180 நிறுவனங்களிற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களிற்கும் குறித்த பிரமாணங்களிற்கு இனங்க அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிமை | 2019 ஆண்டில் அனைத்து நிறுவனங்களிற்கும் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களை இனங்காண்பதற்காக வருடாந்த ஆய்வு அல்லது வேறெறு ஒழுங்கான முறைமை ஒன்றை கடைபிடித்திருக்கவில்லை. அதிகார எல்லையில் அமைந்துள்ள 04 அச்சுக் கல் மற்றும் கொங்கிரீட் அண்மித்த உற்பத்தி நிறுவனங்கள் குறித்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்காததனால் ரூபா 17,600 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களை இனங்காண்பதற்கு முறையான ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியதுடன், முறையாக அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | முழு அதிகார பிரதேசமும் உள்ளடங்கும் வகையில் 2019 மே 07 திகதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய இடங்களை இனங்காணும் ஆய்வொன்றை மேற் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கொன்கிரீட் உறபத்தி நிறுவனங்களிற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,924,333 ஆனதுடன், பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் 2019 சனவரி | கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணதிதினை இனங்கண்டு சேகரிக்க வேண்டியமை. | பதில் வழங்கப்படவில்லை. |

வரையும்
இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டில் ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமை காரணமாக மதிப்பீட்டு வாடகையை செலுத்தும் அடிப்படையில் அயகம பொலிஸ் நிலையத்தை 06 மாத காலத்திற்கு நடாத்திச் செல்ல பஸ் நிலைய மேல் மாடியை வழங்கியிருந்த போதும், கால எல்லை முடிவடைந்ததும் கட்டிடத்தை சபைக்கு திருப்பி வழங்கியிருக்கவில்லை. 2017 ஆண்டிற்காக குத்தகை வாடகை மற்றும் மின்சாரத்திற்காக கூட்டுத் தொகை ரூபா 114,300 அறவிட வேண்டியதாக நிலவியது. | குறித்த நிலுவை குத்தகை வாடகையை அறவிட வேண்டியமை. | குறித்த விடயம் தொடர்பாக 2017 ஆண்டிற்காக நிலுவை பணத்தை இது வரை செலுத்தாததுடன், அயகம பொலிஸ் நிலையத்தை முன்னர் இருந்த இடத்திற்கு கொண்டு செல்லவது பொருத்தம் என்பது தொடர்பாக கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்திடமிருந்து அறிக்கை ஒன்றை கோரி அனுப்பப்பட்டுள்ளதுடன், அவ் அறிகை கிடைக்கும் வரை கட்டிடத்தை முன்னைய மாதத் தொகைக்கே வழங்க மகா சபை முடிவு செய்துள்ளது. |

#### (ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உக்கலடையும் கழிவுப் பொருட்களை கலவான பிரதேச சபையின் கழிவுப் பொருள் வெளியேற்றும் இடத்திற்கு வெளியேற்றிய போதும் முறையான கழிவுப் பொருள் முகாமை வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்தியிருக்கவில்லை. | முறையான கழிவுப் பொருள் முகாமை வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டியமை. | பிரதேச சபை எல்லையில் கொம்போஸ்ட் கொட்டில் ஒன்றிறை நிர்மானிக்க பொருத்தமான இடமொன்று இல்லாததனால், அக் காரியத்தை நிறைவேற்றுவது பிரச்சினையாக உள்ளது. தற்போது சபை எல்லையில் ஒன்று சேறும் உக்களடையாத கழிவுப் பொருடகளை அயகம வாராந்த சந்தையின் இடமொன்றில் களஞ்சியப்படுத்துவதுடன், உக்கலடையும் கழிவுப் பொருட்களை கலவான பிரதேச சபையின் கழிவுப் பொருள் வெளியேற்றும் இடத்திற்கு கொண்டு சென்று முறையாக வெளியேற்றப்படுகின்றது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நினழ்சி நிரல் தொடபாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசெம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | அத் திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர் காலத்தில் மேற் கொள்வதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 05 பதவிகளிற்குரிய 08 வெற்றிடங்கள் நிலவியதுடன் செயலாளர் பதவி, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் (சிவில்) வெற்றிடங்கள் ஆளணியிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிகை எடுக்க வேண்டியமை. | வெற்றிட பதவிகளான செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்), கன வாகன உபகரண இயக்குனர், முன்பள்ளி ஆசிரியர் பதவிகளுக்கு இது வரை நியமனம் வழங்கப்படாமை காரணமாக குறித்த 08 பதவிகளும் வெற்றிடமாக உள்ளன. |
| (ஆ) | இடம் மாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் பதவியை கைவிற்றுச் சென்ற ஊழியர்கள் மூவருக்குரிய கூட்டுத் தொகை ரூபா 25,200 ஆன நிலுவை கடன் மீதிகளை 2017 திசெம்பர் 31 திகதி வரை அறவிட சபைக்கு இயலாமல் இருந்நது. | நிலுவை கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | குறித்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் 06 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 718,500 | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்குவதற்கும் அவ் | திட்டமிடப்பட்ட சில வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமை |

| | | |
|---|---|---|
| ஆன மொத்த ஏற்பாடுகளும் மீதியாக இருந்தன. | ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காரணமாக இவ் ஏற்பாடுகள் சேமிப்பாக உள்ளன. |
| (ஆ) மீளாய்வாண்டில் 16 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 23,622,700 ஆன மொத்த ஏற்பாட்டில் 62 முதல் 99 சதவீதம் வரை வீச்சலவான சதவீதமொன்று மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கும் அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னைய ஆண்டிற்கான செலவுகளை கருத்திற் கொண்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட போதும், எதிர்பார்த்த அளவு செலவு ஏற்படாததனால் சேமிப்பாகியுள்ளது. |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் | 2019 மார்ச் 26 திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. |

## 4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 845,000 பெறுமதியுடைய 03 இயந்திரங்கள் மற்றும் பெறுமதி அறியபபடாத கொங்கிரீட் கலவை இயந்திரமொன்றும் நீண்ட காலமாக விலைவற்று நிலவின. | இயந்திரங்களை பழுதுபார்ப்பது பயன்மிக்கது எனின் பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது முறையாக பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழுதுபார்ப்பதற்கு, அவ்வாறு முடியாத இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |